பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடித எண்.25563/சி2/2010–1, நாள் 28.08.2010

அனுப்புநர்
திரு. ம.குற்றாலிங்கம்,இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
மற்றும் சென்னை/மதுரை சம்பள கணக்கு அலுவலர்கள்

ஐயா,

பொருள் : பள்ளிக்கல்வி – அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்படும் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவது குறித்து அறிவுரை வழங்குவது குறித்து.

பார்வை : தொடக்கக் கல்வி இயக்கநரின் கடித எண்.041192/கே4/ 2010, நாள் 13.8.2010 மற்றும் 25.08.2010.

---

மைய அரசின் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடக்கப்பட்டும், தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டும் அவற்றிற்கான ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தும் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பளம் முதலிய இனங்களுக்கு 2202–01–101–AD என்ற கணக்குத் தலைப்பின்கீழ் ஆண்டுதோறும் அரசால் நிதி விடுவிக்கப்படுகிறது.

2. புதுக்கோட்டை மாவட்டத்தில் சார்நிலைக் கருவூல அலுவலகங்களில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கான சம்பளம் முதலிய உள்ளடக்கிய உண்டியல்கள், ஜூலை 2010க்கான சம்பள உண்டியல்களை ஏற்பதற்கு சார்நிலை கருவூலகங்களில் மறுக்கப்படுவதாக புகார்கள் பெறப்பட்டுள்ளன என தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

த.பி.பா.



www.kalvikural.com

3. அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஊதியம் பெறுவதில் நிர்வாக சிக்கல்கள் தோன்றுவதை தவிர்க்கும் வகையில் இப்பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் பொருட்டு சம்பள உண்டியல்கள் பெறப்படும் போது அவைகளை அனுமதித்து ஊதியம் வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன். இப்பொருள் சார்ந்து பின்வரும் விவரங்களை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருமாறும்பணிக்கப்பட்டுள்ளேன்.

(1). அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கும் போது அப்பணியிடங்கள் தற்காலிக பணியிடங்களாக கருதப்படவில்லை. எனவே இப்பணியிடங்கள் தற்காலிக பணியிடங்கள் என வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களை தற்காலிக பணியிடங்களாக கருதி அப்பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கும் நிலை எழாது.

(2) அனைவருக்கும் கல்வித் திட்டம் 2010 மார்ச் திங்களுடன் முடிவடையாமல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் இத்திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களுக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

(3) குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க ஏதுவாக போதுமான அளவு நிதி 2202–01–101–AD எனும் கணக்குத் தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்:–
கருவூல மற்றும் கணக்கு ஆணையர்,
பனகல் மாளிகை,
எண்.1, ஜீனிஸ் சாலை, சைதாப்பேட்டை
சென்னை–15

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.



www.kalvikural.com